செய்தி வெளியீடு எண்: 373 நாள் : 11.07.2013

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாமல்லபுத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கடற்கரை ஓய்வு இல்ல வளாகம் மற்றும் முட்டுக்காடு, படகு குழாம் ஆகியவற்றை மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சண்முகநாதன் அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஆ. அருண்மொழிதேவன் ஆகியோர் ஆய்வு:</u>

********

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட வேண்டும் என்றும், உலக அளவில் தமிழ்நாட்டை ஒரு சிறந்த சுற்றுலா மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில் சுற்றுலாத்துறையின் மூலம் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனையொட்டி இன்று (11.07.2013) மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கடற்கரை ஓய்வு இல்ல வளாகத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி. கே.எம். சின்னையா, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சண்முகநாதன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஆ அருண்மொழிதேவன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஓய்வு இல்ல வளாகத்தில் உள்ள அறைகள், நீச்சல் குளம், உணவுக் கூடம், மாநாட்டுக் கூடம் ஆகியவற்றை பார்வையிட்டு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், மாமல்லபுரம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் நிறுத்திட சுமார் 8 ஏக்கர் பரப்பளவில் வாகன நிறுத்துமிடம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தினையும், அதுபோல் அரசு பேருந்து நிலையம்

அமையவுள்ள இடத்தினையும் வருடந்தோறும் நடைபெறும் இந்திய நாட்டிய விழா இடத்தினையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கடல்வாழ் உயிரின காட்சியகம் அமையவுள்ள இடத்தினையும் பார்வையிட்டனர்.

முட்டுக்காடு படகு குழாமில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் (நிர்வாகம்) திரு. எஸ். கேபிரியேல், பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர் திரு. என். பிரபாகரன், கூடுதல் இயக்குநர் (சுற்றுலாத்துறை) திரு. எஸ். பக்தவச்சலம், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**